# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.அ.விஜயன்,பி.இ.,<br>உதவி இயக்குநர்<br>மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,<br>மதுரை மாவட்டம்,<br>செக்டார்-6, ஆனையூர்-முடக்கதான் பிரதான சாலை, கூடல்புதூர்,<br>மதுரை-625 017.<br>E.mail –ID :dtcpmadurai@gmail.com<br>www.tn.gov.in/dtcp | திரு.M.கபில்ராஜ்,<br>க.எண்:2/303A,CM நகர்,<br>2வது காமராஜர் தெரு,<br>வண்டியூர்,<br>மதுரை 625 020, |
| ந.க.எண்.983/2022/மமா. | நாள்.08.06.2022. |

ஐயா/அம்மையீர்,

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்- மதுரை மாவட்டம்-மதுரை கிழக்கு வட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - குருத்தூர் ஊராட்சி- ஜோதியாபட்டி கிராமம் - சர்வே எண் .66/3A –ல் 0.71ஏக்கர் (2900.00ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:

1) மனுதாரர்.திருM.கபில்ராஜ், மதுரை அவர்களின் கடிதம் மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட நாள்.25.02.2022, 06.04.2022, 12.05.2022 மற்றும் 31.05.2022. (Online Application No.202100701017973, Date.22.12.2021.)
2) இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண் தி4/ 221/2022, நாள்.03.02.2022.
3) அரசாணை எண்-18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை,நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை. நாள்-31.01.2020.
4) உத்தேச மனைப்பிரிவு சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானபத்திர ஆவணம் எண்.1568/2022, நாள்.11.05.2022.
5) மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்புசெய்யப்பட்டது.ஆவணஎண். 1569/2022,நாள்.11.05.2022.
6) இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.25.05.2022. (கட்டணங்கள் செலுத்த கோரியது).
7) மனுதாரர். திருM.கபில்ராஜ்,மதுரை, அவர்களது கடிதம் நாள். 31.05.2022. (கட்டணங்கள் செலுத்தியது)
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
9) அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
10) அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, UD4(1), நாள் 09.12.2020
11) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள் 30.08.2017

12) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
13) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2017/பிஏ-2, நாள்.06.11.2019.
14) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-19799/2020/போ, நாள்-18.12.2020, 24.12.2020 மற்றும் 08.02.2021
15) உதவி இயக்குநர், மதுரை, மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம் இதே எண் மற்றும் நாள்.08.06.2022. **(ம.வ/மா.ந.ஊ.அ.(மதுரை மாவட்டம்). எண்.**12/2022.)

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை(15)-ல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதம் மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் உத்தரவு உள்ளாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பார்வை(1)-ல் கண்டுள்ள தங்களது கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு மனைப்பிரிவு சாலைகள், பொது ஒதுக்கீடுகள் ஒப்படைப்பு செய்யப்பட்டு அதன் அசல் தானபத்திரங்கள் பெறப்பட்டு, பார்வை(4)-ல் கண்ட அசல் ஆவணம் **ஊராட்சி தலைவர், குருத்தூர் ஊராட்சி மன்றம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்-க்கும்** மற்றும் பார்வை (5)-ல் கண்ட அசல் ஆவணம் மேற்பார்வை பொறியாளர், TANGEDCO-விற்கும் பார்வை(10)-ல் கண்டுள்ள அரசாணையின்படி இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மனைப்பிரிவு இறுதி ஒப்புதலுக்காக **ஊராட்சி தலைவர், குருத்தூர் ஊராட்சி மன்றம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்** அவர்களை அணுகுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

08/6/2022

தமிழ்நாடு அரசு
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
மதுரை மாவட்டம், மதுரை.

ந.க.எண்.983/2022 மமா நாள்.08.06.2022.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/மா.ந.ஊ.அ.(மதுரை மாவட்டம்) எண்.12/2022 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதிகள் 1972-ன்படி ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கேற்ப தார் கற்களைக் கொண்டு மனுதாரரால், நிர்வாக அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்பட வேண்டும்.
2. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்.
3. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே. TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர்கள்/ உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தை செலுத்தி ஊராட்சி மன்றத் தலைவர், குருத்தூர் ஊராட்சி மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், மதுரை உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க ஊராட்சி தலைவர், சக்குடி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
6. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் ஊராட்சி மன்றத் தலைவர், குருத்தூர் ஊராட்சி மன்றம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், மதுரை உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க செயல் அதிகாரி/ஊராட்சி மன்றத் தலைவர், சக்குடி ஊராட்சி ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும். மேலும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் ஊராட்சி பகுதிக்கு குறைந்தது 3 மீ அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டி நிறுத்தம், கொட்டகை

போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும், மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

8. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக் கூடாது கட்டடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.
9. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
10. கடைக்கல் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.
11. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.
12. மனுதாரர்களால் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள இடத்தை ஊராட்சி தலைவர், குருத்தூர் ஊராட்சி ஊராட்சி அவர்களிடம் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
13. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
14. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் / இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
15. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்திதல் உட்பிரிவு செய்து உள்ளாட்சி அங்கீகாரம் வழங்கும் முன் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும். இதனை உள்ளாட்சி அமைப்பு தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய நிலங்கலை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
16. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
17. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக உள்ளாட்சி தலைவர் (Executive Authority) உடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.
18. அ.மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1984-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)ன் படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்வரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்கு ஊராட்சி தலைவர், குருத்தூர் ஊராட்சி அவர்கள் மன நிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவிற்கு ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

உ.மேலும், மேற்படி சட்டங்களின் படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே தான் ஊராட்சி தலைவர், குருத்தூர் ஊராட்சி அவர்கள் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. மனுதாரர்கள் ஊராட்சி தலைவர், ஊராட்சி தலைவர், குருத்தூர் ஊராட்சியில் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண், நாள் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாள், எண் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.
20. தமிழ்நாடு வீட்டுவசதி மனைப்பிரிவு மனையின் பரப்பு 10 சதுர மீட்டருக்கு குறைவாக இருந்தால் கட்டட விதிகள் மட்டுமே பொருந்தும்.
21. நிலவங்கி (Land Bank) என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை அரசாணை எண்.1139 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.14.09.1993ன் படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.
22. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.
23. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
24. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
25. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் :

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்- மதுரை மாவட்டம்-மதுரை கிழக்கு வட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - குருத்தூர் ஊராட்சி - ஜோதியாபட்டி கிராமம் - சர்வே எண் 66/3A—ல்

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு = 0.71ஏக்கர் (2900.00ச.மீ)

கோரிய மனைகளின் எண்ணிக்கை = 14 எண்ணம்
ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை = 13 எண்ணம்

<u>பொது ஒதுக்கீடு</u> (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.)

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | = 2900.00 ச.மீ |
| உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு | = 658.00 ச.மீ |
| **மீதமுள்ள மனையிடத்தின் பரப்பளவு** | **= 2242.00 ச.மீ** |

**நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 4367/ 2019/பிஏ2, நாள். 05.02.2020, CASE-III-ன்படி பூங்கா பரப்பளவு 100.00 சமீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்,மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிக்காட்டி மதிப்பீடு தொகையினை மனுதாரர் செலுத்தியுள்ளார்.**

<u>பொது ஒதுக்கீடு</u> (TNCD & BR 2019, விதி 47(8) -ன்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது.)

1. உள்ளாட்சி உபயோகத்திற்கு - 18.08ச.மீ (0.62 %)
2. TANGEDCO உபயோகத்திற்கு - 34.80 ச.மீ (1.20 %)

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், கிருத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை : திரு/திருமதி ம. வனிதா

கோப்பு எண்: 1

நாள்: 15.7.2022

பொருள் : மதுரை மாவட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - கிருத்தூர் ஊராட்சி - ஜோதியாபட்டி கிராமம் சர்வே எண்கள்: 66/3A -ல் 2242.ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது - வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை :

1) அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம்-III பிரிவு 1(a), நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017
3) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், அவர்களின் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: நாள்:
4) இவ்வலுவலக இதே எண்ணிட்ட நடவடிக்கைகள் நாள்:
5) திரு. M. கபில்ராஜ் அவர்களின் கட்டணச்செலுத்துச்சீட்டு நாள்: 15.07.2022

-----------------

**உத்தரவு:-**

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிருத்தூர் ஊராட்சி - ஜோதியாபட்டி கிராமம் சர்வே எண்கள்: 66/3A -ல் 2242.ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 2ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (in principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.குஎண்: 1/2022 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு. M. கபில்ராஜ் என்பவருக்கு பார்வை 3-ல் காணும் கடிதம் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

வரன்முறைக் கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ~~ரூ.30/-~~ வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ~~ரூ.25/-~~ வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே, இம்மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பார்வை 5-ல் காணும் கடிதத்தின் கீழ்க்காணும் விபரப்படி முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச்சீட்டு இணைக்கப்பெற்றுள்ளன.

| வ. எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. | தொகை செலுத்தப்பட்ட சலான் எண் மற்றும் நாள் / கருவூல செலுத்துச் சீட்டு எண்: |
|---|---|---|---|---|---|
| | வரன்முறை கட்டணம் (unsold) ச.மீ | | | | |
| | மேம்பாட்டுக் கட்டணம் (unsold) ச.மீ | 13. ப்ளாட்கள் | Rs. 18000/- | Rs. 18000/- | ஊராட்சியில் வழங்கப்பட்ட பல்வகை ரசீது எண் 19051 |
| | மொத்தம் | | Rs. 18000/- | Rs. 18000/- | |

மேற்கண்டவாறு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் மேம்பாட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட விற்பனை செய்யப்படாத மனைபிரிவுகளுக்கு மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகள்:**

| | | |
|---|---|---|
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு (மனைஎண்கள்: 1 முதல் 13 வரை) | : | 2242 ச.மீ. |
| பூங்கா மொத்த பரப்பரளவு (மனை எண்: 1) | : | 18.08 ச.மீ |
| கட்டணம் செலுத்தப்பட்ட மொத்த பரப்பளவு | : | 2242. ச.மீ |

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவில் அமையும் பூங்காவினை உள்ளாட்சிக்கு தானமாக தாமரைப்பட்டி சார்பதிவாளர் பத்திரப்பதிவு அலுவலகத்தில் (பத்திர எண்:TP1196420431/2022 ) பதிவு செய்து கொடுத்துள்ளார்.
2. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் தனியாரின் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. மாறாக கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
4. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும், அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
5. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என்ற உறுதியின் பேரிலேயே வரன்முறை செய்யப்படுகிறது.
6. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிடத்திற்கு அனுமதியாக கருதப்பட மாட்டாது.
7. உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் ஊரமைப்புத்துறை உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்திட அனுமதி இல்லை.
8. தனியர் வீடு/கட்டடம் கட்ட வரைபட அங்கீகாரம் பெறும் போது, அவரது மனைக்குரிய சாலைப்பகுதியை உள்ளாட்சிக்கு தானமாக வழங்க வேண்டும். தவறின், இம்மனை வரன்முறை உத்தரவு தானாகவே இரத்தாகிவிடும் (Automatically Cancelled).

M. Vanitha
தலைவர்
குருத்தூர் ஊராட்சி
திருத்தூர் ஊராட்சி

பெறுநர் : M. கபில்ராஜ்,
மதுரை.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate